**28.11.2019**

**இ.ம.எண். 277/2018 அ.வ.எண்.16/2018**

**குறுக்கு விசாரணை எ.ம.சா.2**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தினை படித்து பார்த்து சரியாக உள்ளது என்பதை ஊர்ஜிதம் செய்தபின்பு தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் சர்வே எண் 586/2ஏ க்கு உட்பட்ட நிலத்தினை அளந்தபின்பு மதில் சுவர் கட்டியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரமாணவாக்குமூலத்தில் எந்த தேதியில் அளந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 10ம் மாதம் 2017ம் வருடம் நான் அளந்தேன். அரசு சர்வேயரை வைத்து தான் அளந்தேன். நான் எனது நிலத்தினை அளந்த சமயத்தில் எனது நிலத்திற்கு அருகாமையில் உள்ள நிலத்தின் உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அறிவிப்பு கொடுத்த விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மனுதாரர் இடத்தில் போடப்பட்டிருந்த போர்வெல்லினை எதற்காக பயன் படுத்தி வந்தாகள் என்ற விவரம் பற்றி தெரியுமா என்றால் மனுதாரர் நிறுவனம்

நடத்துவதற்காக பயன் படுத்தி வந்தார்கள். மனுதாரருக்கு சொந்தமான நிலம் சர்வே எண் 586/2 க்கு உட்பட்டது என்றால் சரிதான். எனக்கு ஞாபகம் இல்லை. மனுதாரர் சர்வே எண் 586/2 க்கு உட்பட்ட நிலத்தினை வாங்கிய சமயத்தில் அந்த நிலத்தில் போர்வெல் இருந்ததா என்றால் இல்லை. மனுதாரர் நிலத்தினை வாங்கும் சமயத்திலேய அங்கு போர் வெல் இருந்தது என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமான சர்வே எண் 586/2ஏ க்கு உட்பட்ட நிலத்தினை நான் எந்த வருடம் கிரயம் பெற்றேன் என்றால் 1990 ஆகும். நான் எனது சொத்தினை கிரயம் வாங்கிய சமயத்தில் எனது இடத்தில் போர் வெல் இருந்ததா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் வழக்கு தாவா சொத்தில் போர்வெல் 5.3.2018ம் தேதியில் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 5.3.2018ம் தேதியில் இருந்த போர்வெல்லை எடுத்துவிட்டபடியால் நான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரரின் நிலத்தில் உள்ள போர்வெல்லை நான் எந்த காலத்திலும் தொந்திரவு செய்தது இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 5.3.2018ம் தேதி மனுதாரரின் நிலத்தில் போர்வெல் இருந்தது அதனை நான் தான் ஆட்களை வைத்து உடைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 5.3.2018ம் தேதி மனுதாரர்கள் எனக்கு சொந்தமான

காம்பவுண்டினை இடித்து போர்வெலில் இருந்த மின் மோட்டாரை எடுத்துவிட்டதாக என் பிரமாண வாக்குமூலத்தில் கூறி உள்ளபடி அந்த சம்பவத்திற்கு நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் 6.3.2018ம் தேதி படாளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அந்த புகாரின் மீது படாளம் காவல் நிலையத்தில் மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் நிலம் சம்பந்தபட்ட பிரச்னை என்றபடியால் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. 5.3.2018ம் தேதி நான் எனக்கு சொந்தமான இடத்தில் தான் இருந்தேன் என்றால் நான் எனது கடையில் தான் குடியிருக்கிறேன், அங்கு தான் இருந்தேன். மனுதாரர் அவருக்கு சொந்தமான போர்வெல்லை உபயோகப்படுத்தி கொண்டு இருப்பதால் நான் கட்டி உள்ள மதில் சுவரை இடித்து விட்டு போர்வெல்லை எடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. அந்த போரினை மனுதாரர் பயன் படுத்தாமல் இருந்தது, போரினை மேலும் ஆழப்படுத்த முயற்சி செய்தார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரர் புதுபோரினை எனது இடத்தில் அமைப்பதற்கு முயற்சித்ததாக நான் கூறிஉள்ளேன் என்றால் சரிதான். போர்வெல் அமைப்பதற்கான வழிமுறை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் ஏற்கனவே இருந்த போர்வெல்லை பயன்படுத்தி வந்ததாலும் புதிய போரினை அமைப்பதற்கு அவசியம்

இல்லை என்றால் சரியல்ல. பழைய போரினை மனுதாரர் பயன்படுத்தவில்லை. வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் புதிய போரினை அமைப்பதற்காக முயற்சித்த படியால் அவர்கள் அமைத்த பல்லக்கில் நான் உட்கார்ந்துவிட்டேன் என்று என் பிரமாணவாக்கு மூலத்தில் கூறி உள்ள சங்கதிகள் எந்த தேதியில் நடைபெற்றது என்றால் 5.3.2018 அல்லது 6.3.2018 ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் மனுதாரர் வாய்மொழியாக கூறி தான் அந்த சங்கதி பற்றி எனக்கு தெரியும். என்னிடம் காட்டபடும் நீ.ம.சா.ஆ.1 நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அனுப்பபட்ட அழைப்பாணை அதில் எனக்கு வந்த தடை உத்தரவு நகலை நான் பெற்று கொண்டேன் என்று கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் நீதிமன்றத்தின் தடை ஆணையை மீறி செயல்பட்டிருந்தால் நிபந்தனையற்ற மன்னிப்பு கோருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் மூலமாக வாய்மொழியாக தடை உத்தரவினை தெரிந்து கொண்டும் நீதிமன்றத்தில் இருந்து தடை உத்தரவினை பற்றி அழைப்பாணை மற்றும் உத்தரவினை பெற்று கொண்டும் வேண்டுமென்றே நீதிமன்ற உத்தரவினை

மீறி அவமதிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தடை உத்தரவு பெற்ற பின்பு நான் ஆட்களை வைத்து அத்துமீறி நுழைந்து மனுதாரர் போர் வெல்லை சேதப்படுத்தினேன் என்றால் மனுதாரர் தான் போர்வெல்லை உடைத்து சேதப்படுத்தினார். வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை சாட்சியம் ஒத்திவைக்கபடுகிறது.